சுருக்கம்

வேளாண்மை – உழவர் நலத்துறை – கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்- 2021-2022 மற்றும் 2022-2023- ஆம் ஆண்டுகளுக்கான திட்டப்பணிகளை உழவர் நலன் சார்ந்த இதர 7 துறை திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது - உழவர் நலன் சார்ந்த இதர 7 துறைகளின் திட்டங்கள் / செயல்பாடுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை - உழவர் நலத் (வஇபதி) துறை

அரசாணை (நிலை) எண். 44 நாள்: 16.03.2023

திருவள்ளுவர் ஆண்டு, 2054
சுபகிருது, பங்குனி -2ஆம் நாள்

படிக்கப்பட்டது:

1. வேளாண்மை நிதிநிலை அறிக்கை நாள். 14.08.2021, அறிவிப்பு எண்.1.
2. அரசாணை (நிலை) எண். 59, வேளாண்மை -உழவர் நலத் (வஇபதி) துறை, நாள் 09.03.2022.
3. வேளாண்மை நிதிநிலை அறிக்கை நாள். 19.03.2022, அறிவிப்பு எண். 1.
4. அரசாணை (நிலை) எண். 298, வேளாண்மை -உழவர் நலத் (வஇபதி) துறை, நாள் 16.12.2022.

---

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில், முறையே 2021-2022 மற்றும் 2022-2023-ஆம் ஆண்டுகளுக்கான வேளாண்மை – உழவர் நலத் துறைக்கான தனி நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பித்தபோது, "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" எனும் திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பான பின்வரும் அறிவிப்புகளை வெளியிட்டார்:-

"ஐந்து ஆண்டுகளில் தமிழகம் முழுவதிலுமுள்ள அனைத்து கிராமங்களிலும் ஒட்டு மொத்த வேளாண் வளர்ச்சியை உருவாக்கிட அனைத்து துறைகளின் ஒருங்கிணைப்புடன் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்" என்ற மாபெரும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். வட்டார அளவில்

(கு.பி.பா.)

தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, பால்வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நீர்வள ஆதாரத் துறை, எரிசக்தித் துறை உள்ளிட்ட துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைப்பதே "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்". இச்சீரிய திட்டத்தின் கீழ், அனைத்து கிராமங்களும், ஒட்டுமொத்த வளர்ச்சியடைந்து, தன்னிறைவு பெற்ற கிராமங்களாக மாறவேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் தற்போது, 12,524 கிராமப் பஞ்சாயத்துகள் உள்ளன. இதில் ஒவ்வொரு ஆண்டிலும், ஐந்தில் ஒரு கிராமப் பஞ்சாயத்தை தேர்வுசெய்து, ஐந்தாண்டுகளில் அனைத்து கிராம பஞ்சாயத்துக்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அடுத்த 10 ஆண்டுகளில் 11.75 இலட்சம் எக்டர் தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர வேண்டும் என்ற தொலைநோக்கு திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தினைச் செயல்படுத்த 36 மாவட்டங்களில் ஆரம்ப கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது 19.31 இலட்சம் எக்டர் தரிசு நிலங்கள் உள்ளன என கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் வேளாண்மையை விரிவு படுத்துவதற்கான அடுத்த நம்பிக்கை, தரிசு நிலங்களே. தரிசு நிலங்களை பரிசு நிலங்கள் ஆக்கி சாகுபடி பரப்பு உயர்த்தப்படும்.

இத்திட்டமானது முதற்கட்டமாக, 2021-2022-ஆம் ஆண்டில், ரூ.250 கோடி செலவில் மாநில நிதி உதவியுடன், 2,500 கிராமங்களில் வேளாண்மைத் துறையின் திட்டங்களுடன், இதரத் துறைகளின் திட்டங்களையும் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். மேலும், இத்திட்டமானது 2022-2023-ஆம் ஆண்டில், 3,204 கிராமப் பஞ்சாயத்துக்களில் 300 கோடி ரூபாய் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும்".

திட்டத்தின் நோக்கங்கள் :

- கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டு வருதல்.
- நீர்வள ஆதாரங்களைப் பெருக்குதல்.

- சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைத்தல்.
- வேளாண் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்துதல்.
- நுண்ணீர்ப் பாசன முறையினை பின்பற்றுதல்.
- கால்நடைகளின் நலன் காத்து, பால் உற்பத்தியைப் பெருக்குதல்.
- வருவாய்த் துறையின் மூலம் புதிய பட்டா / பட்டா மாறுதல் செய்து வழங்குதல்.
- கூட்டுறவு சங்கங்கள் மூலம் அதிக அளவு பயிர்க் கடன்கள் வழங்குதல்.
- கால்வாய், பாசன நீர் வழித்தடங்களைத் தூர்வாருதல்.

2) மேற்கண்ட அறிவிப்புகளைத் தொடர்ந்து, 2021-2022 மற்றும் 2022-2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினை வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள்துறை மற்றும் வேளாண்மை பொறியியல் துறை மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொருட்டு முறையே ரூ.227.0588 கோடி மற்றும் ரூ.234.22926 கோடி நிதி ஒதுக்கீடு செய்தும் திட்ட செயலாக்கத்திற்கான மேற்கண்ட துறைகள் குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை அங்கீகரித்தும் மேலே இரண்டு மற்றும் நான்கில் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி ஆணைகள் வெளியிடப்பட்டன.

3) 2021-2022 ஆம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் உழவர் நலன் சார்ந்த இதர 7 துறைகளான 1) வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, 2) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, 3) கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, 4) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, 5) நீர்வள ஆதாரத் துறை, 6) எரிசக்தி துறை, 7) கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை ஆகிய துறைகளிடமிருந்து துறைவாரியான வழிகாட்டு நெறிமுறைகள் பெறப்பட்டுள்ள நிலையில், மேற்கண்ட துறைவாரியான வழிகாட்டு நெறிமுறைகளை அரசு கவனமுடன் பரிசீலித்து, 2021-2022 ஆம் ஆண்டிற்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் உழவர் நலன் சார்ந்த இதர 7 துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் / செயல்பாடுகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளவாறு அங்கீகரித்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(த.பி.பா.)

4) மேலும், 2021-2022 ஆம் ஆண்டிற்கான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உழவர் நலன் சார்ந்த இதர 7 துறைகள் மூலம் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் / செயல்பாடுகள் குறித்து அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளையே, 2022-2023-ஆம் ஆண்டு வழிகாட்டு நெறிமுறைகளாகவும் கருதி, 2022 - 2023-ஆம் ஆண்டிற்கான உழவர் நலன் சார்ந்த இதர 7 துறைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளாக அங்கீகரித்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசு செயலாளர்**

**பெறுநர்**

இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
முதன்மை செயலாளர் / ஆணையர், சர்க்கரைத்துறை, சென்னை-35.
தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை, அண்ணாசாலை, சென்னை-35.
துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு விதை மேம்பாட்டு முகமை, சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தோட்டக்கலை வளர்ச்சி மேம்பாட்டு முகமை, சென்னை-5.
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகம், சென்னை-32.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், எரிசக்தித்துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு முதன்மைச் செயலாளர், கூட்டுறவு, உணவு (ம) நுகர்வோர் பாதுகாப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு முதன்மைச் செயலாளர், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் (ம) கதர்த் துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.

அரசு முதன்மைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் (ம) மீனவர் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை -9.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-3.
இயக்குநர், விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்றுத்துறை, கோயம்புத்தூர்-3.
முதன்மை மாநில கணக்காயர் (G&SSA), சென்னை-18.
முதன்மை மாநில கணக்காயர் (E&RSA), சென்னை-18.
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை-18.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநில கணக்காயர் அலுவலகம், சென்னை -9.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை – 9.
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை -9.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை -9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், வேளாண்மை – உழவர் நலத் துறை, தலைமைச் செயலகம், சென்னை-9.
நிதித் (வேளாண்-உந)த் துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (அனைத்துப் பிரிவுகள்) துறை, சென்னை -9,
உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத் துறை, சென்னை-9.
சம்மந்தப்பட்ட கோப்பு எண்.21163/வஇபதி/2021.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 16/3/23

(த.பி.பா.)

அரசு ஆணை (நிலை) எண். 44, வேளாண்மை – உழவர் நலத் (வஇபதி) துறை, நாள்: 16.03.2023.

## இணைப்பு

# உழவர் நலன் சார்ந்த இதர துறைகள் மூலம் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் / செயல்பாடுகள்

### I. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் முகாம் நடத்தி

(i) சிறு, குறு விவசாயி சான்று மற்றும் அடங்கல் சான்று வழங்குதல்.
(ii) நிலப்பட்டா மாறுதல் வழங்குதல்.
(iii) தொகுப்பு நிலங்களை சர்வே செய்து கொடுத்தல்
(iv) வண்டிப் பாதை புறம்போக்கு நிலங்களை கண்டறிந்து அளவீடு செய்து கொடுத்தல்.
(v) சாகுபடிக்கு கொண்டுவரப்படும் தொகுப்பு தரிசு நிலங்களில் வளர்க்கப்படும் மரங்கள் மற்றும் பயிர் சாகுபடி பரப்பினை கிராம அடங்கல் பதிவேட்டில் எவ்வித விடுதலுமின்றி பதிவு செய்யவேண்டும்.
(vi) கிராமத்தில் தகுதியுள்ள 60 வயதிற்கு மேற்பட்ட சிறு/குறு விவசாயிகள்/ விவசாய தொழிலாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கிட நடவடிக்கை எடுத்தல்.

### II. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

(i) சிறிய தடுப்பணைகள் அமைத்தல் (Check dam/ Boulder dam), சிறிய மழைநீர் சேகரிப்பு அமைப்புகள், நீர் அமிழ்வு குட்டைகள் (Sunken ponds) அமைத்தல்
(ii) தனிநபர் நிலங்களில் மண் வரப்புகள் மற்றும் கல்வரப்புகள் அமைத்தல்
(iii) சி மற்றும் டி வாய்க்கால் தூர்வாருதல்
(iv) நாற்றங்கால் பண்ணை அமைத்தல்
(v) சாலையோரத்தில் மரங்கள் நடுதல் (Avenue Plantation) மற்றும் பரந்த அளவு மர கன்றுகள் நடுதல் (Mass Tree Plantatiuon –MTP)
(vi) தேர்வு செய்யப்பட்ட கிராமத்தில் சிறிய தானிய கிடங்கு அமைத்தல்
(vii) பண்ணைக்குட்டை அமைத்தல்

(viii) தனிநபர் மற்றும் சமுதாய கிணறுகள் அமைத்தல்

(ix) ஓரடுக்கு கப்பி சாலை அமைத்தல்

(x) சிறு/குறு மற்றும் ஆதிதிராவிட / பழங்குடியின விவசாயிகளின் மொத்த நிலத்தின் 20 சதவீத நில பகுதிகளில் பலன்தரும் பழக்கன்றுகள் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 20 விவசாயிகள் என்ற விகிதத்தில் நில மேம்பாட்டு பணிகளோடு இணைந்து பழமரகன்று நடவுப்பணிகளும் 2022-2023-ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துடன் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தினையும் ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும்

(மேலே (iv) முதல் (x) வரை உள்ள பணிகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்துடன் (TNCDW) ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்).

## III. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

### 1. அனைத்து விவசாயிகளுக்கும் 100 சதவீதம் கிசான் கடன் அட்டை வழங்குதல்

விவசாயிகளுக்கு குறுகிய கால முறையில் வேளாண் கடன் தேவைகள் சரியான நேரத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக 1998-இல் அறிமுகப்படுத்தப்பட்ட உழவர் கடன் அட்டை திட்டத்தின் (Kissan Credit Card – KCC) மூலம் விவசாயிகளுக்கு வேளாண் பணிகளுக்காக குறுகிய காலக் கடன்களைப் பெற உதவுவதோடு வேளாண்மை சார்ந்த இதர செலவுகளுக்கும் கடன் வழங்கப்படும்.

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (Natonal Bank for Agriculture and Rural Development – NABARD) வழிகாட்டுதலின்படியும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் அறிவுரைகளின்படியும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு 7 சதவிகித வட்டியில் உழவர் கடன் அட்டை திட்டத்தின் (KCC) கீழ் பயிர்க் கடன் மற்றும் நகை அடமானத்தின் பேரில் பயிர்க் கடன்கள் வழங்கப்படும்.

பயிர்க் கடன் கோரும் விவசாயிகளுக்கு, தகுதியின் அடிப்படையில் மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளையில் புதிய சேமிப்புக் கணக்கு (KCC SB Account) துவக்கப்பட்டு, ருபே உழவர் கடன் அட்டை (Rupay KCC) வழங்கப்படுகிறது. வங்கிக் கணக்கில் பயிர்க் கடன் தொகை பட்டுவாடா செய்யப்பட்டவுடன், ருபே உழவர் கடன் அட்டை மூலம் தேவைப்படும் தொகையினை ATM-கள், விற்பனை முனைய இயந்திரங்கள் (Point of Sale devices) மற்றும் micro ATM-கள் மூலம் பணம் எடுப்பதற்கு விவசாயிகளுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், அனைத்து கடன்களும் கே.சி.சி. கடன் அட்டை மூலம் மட்டுமே வழங்குவதற்கு தேவையான அனைத்து பணிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**2. பயிர்க்கடன்களை அதிக அளவில் வழங்குதல்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டி விகிதத்தில், உழவர் கடன் அட்டை திட்டத்தின் கீழ் வருவாய் துறையினரால் வழங்கப்படும் பட்டா, சிட்டா மற்றும் பயிர் சாகுபடிக்கான சான்றிதழ் (அடங்கல்) போன்ற அனைத்து தேவையான ஆவணங்களையும் பெற்று விவசாயிகளுக்கு பயிர்க்கடன்கள் வழங்கப்பட வேண்டும். மேலும் மாநில அளவிலான தொழில்நுட்பக் குழு (SLTC) பரிந்துரைத்த கடன் அளவை பின்பற்றி பயிர் சாகுபடி செய்ய உள்ள பயிர் வகைக்கேற்ப பயிர்க்கடன் வழங்கப்பட வேண்டும். சிறு மற்றும் குறு விவசாயிகள், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடி (SC&ST) விவசாயிகள் உள்ளிட்ட புதிய விவசாயிகளுக்கு பயிர்க்கடன்கள் வழங்குவதன் மூலம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி எய்தப்பட வேண்டும்.

**3. விவசாயிகளுக்கு வழங்கும் கூட்டுறவு கடன்களில் உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் வழங்குதல் .**

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகிய கூட்டுறவு நிறுவனங்கள், பயிர் வளர்ச்சிக்கு தேவையான யூரியா, டிஏப்பி, எம்ஓப்பி மற்றும் காம்ப்ளக்ஸ் உரங்களை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாக தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பயிர்க்கடனில் பொருட்பகுதியாகவும், நேரடி விற்பனை மூலமாகவும் விநியோகித்து வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் மற்றும் துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா சங்கம் ஆகிய கூட்டுறவு நிறுவனங்கள் முளைப்புத்திறன் கொண்ட தரமான விதைகளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

4. பயிர்க்காப்பீடு செய்வதை ஊக்குவித்தல்

இயற்கை சீற்றங்களால் விவசாயிகளுக்கு ஏற்படும் பயிர் இழப்பினை ஈடுசெய்யும் வகையில் பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்திற்கு மாற்றாக, ராபி பருவம் 2016-17 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் புதிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டமான "Pradhan Mantri Fasal Bima Yojana" (PMFBY) தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம், காரீப் பருவம் 2020ஆம் ஆண்டு முதல் சில மாற்றங்களுடன் "Revamped Pradhan Mantri Fasal Bima Yojana" (RPMFBY) என செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான செயல்பாட்டு நெறிமுறைகள் (Operational Guidelines) இந்திய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சகத்தால் வகுத்து வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை கூட்டுறவு நிறுவனங்களில் சிறப்பாக செயல்படுத்திட ஏதுவாக இத்திட்டம் குறித்து விளம்பரப்படுத்தி விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல், இத்திட்டத்தில் விவசாயிகளை சேர்த்தல் (Entrolment) அவர்களுக்கு பெறப்படும் இழப்பீட்டுத் தொகையை வழங்குதல் (Disbursement of claims) போன்றவை குறித்து அவ்வப்போது பதிவாளரால் வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்ற வேண்டும்.

5. தொகுப்பு அடிப்படையில் தேவைக்கு ஏற்ப நெல் கொள்முதல் நிலையங்களை அமைத்தல்

விவசாயிகளின் நலன் கருதி, மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், நெல் கொள்முதல் நிலையங்கள் மூலமாக மைய அரசு நிர்ணயித்த அடிப்படை ஆதார விலையில் நெல் கொள்முதல் செய்கிறது.

அரசு ஆணை (நிலை) எண்.60, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, நாள் 16.07.2021-இல் மைய அரசின் பரவலாக்கப்பட்ட திட்டத்தில் நேரடி கொள்முதல் நிலையங்கள் அமைத்தல் (ம) நெல் கொள்முதல் செய்வது தொடர்பான வழிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைப்பதற்கு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள

நிலையில் மாவட்ட ஆட்சியரிடம் உரிய அனுமதி பெற்று நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வேண்டும்.

## 6. வேளாண் இயந்திரம் வாங்குவதற்கு கடன் வழங்குதல்

விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குதல் மற்றும் மூலதன உருவாக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் விவசாய உற்பத்தி மற்றும் விவசாய உற்பத்தியில் நீடித்த நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் நோக்கத்துடன் நுண்ணீர் பாசனம், நில மேம்பாடு, பண்ணை இயந்திரமயமாக்கல், கறவை மாட்டுக் கடன் மற்றும் கால்நடை வளர்ப்பு போன்ற வேளாண்மை நோக்கங்களுக்காக மத்திய கால முதலீட்டு கடன்களை, கூட்டுறவு நிறுவனங்கள் கடன்களை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 7. தேர்வு செய்யப்பட்ட கிராமத்தில் சிறிய தானியக் கிடங்கு அமைத்தல்

அறுவடைக் காலங்களில் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் விளைபொருட்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதிலிருந்து தவிர்த்திடவும், சேமிப்பு இழப்புகளின்றி பாதுகாத்திடவும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் நபாரிடின் (NABARD) ஊரக உட்கட்டமைப்பு நிதி மற்றும் சேமிப்பு கிடங்கு உட்கட்டமைப்பு நிதியினை கொண்டு கிடங்குகள் கட்டப்பட வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட வேண்டும்.

## IV. கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர்நலத் துறை

### 1. கால்நடை பராமரிப்புத்துறை

### கால்நடைவளர்ப்பு

- கிராம மக்களுக்கு கறவை பசு, வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் மற்றும் கோழிகள் வழங்கி தொழில் முனைவோராக உருவாக்கலாம்.
- கறவைப் பசு, வெள்ளாடுகள் / செம்மறியாடுகள் மற்றும் கோழிகள் வளர்ப்போருக்கு கிசான் கடன் அட்டை மூலம் வங்கி கடன் வழங்கி கால்நடை வளர்ப்புத் தொழிலை ஊக்குவித்து தொடர் வாழ்வாதாரத்திற்கு வழிவகை செய்யலாம்.

- கறவை பசுக்கள் வழங்குவதால் கிராம ஊராட்சியில் தொடக்க பால் கூட்டுறவு சங்கம் இல்லாத கிராம ஊராட்சியில் பால் வள மேம்பாட்டுத் துறை மூலம் தொடக்க பால் கூட்டுறவு சங்கம் ஆரம்பித்து கிராம மக்களால் சங்கத்திற்கு பால் வழங்கி அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தால் அவர்களது வாழ்க்கைத் தரம் உயரும்.

<u>தீவன மேலாண்மை</u>

- விவசாயிகளின் சொந்த நிலங்களில் தீவன சாகுபடி மேற்கொள்ள தேவையான அனைத்து இடுபொருட்களும் மானிய விலையில் வழங்குதல்.
- தீவன சாகுபடி பரப்பினை அதிகரித்திட ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள தென்னை, மா, கொய்யா போன்ற தோப்புகளில் தீவனப் பயிர்களை ஊடு பயிராக சாகுபடி செய்வதை ஊக்குவித்தல்.
- தீவனம் அதிகம் உற்பத்தியாகும் பருவகாலங்களில் அதிகம் கிடைக்கும் தீவனங்களை வைக்கோல், ஊறுகாய் புல் அல்லது பேல்களாகவோ பதப்படுத்தி அவசர காலங்களில் உபயோகப்படுத்துதல்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையுடன் இணைந்து பொது மேய்ச்சல் நிலங்களை அறிவியல் ரீதியாக மேம்படுத்துதல்.
- பொது மேய்ச்சல் நிலங்களில் முறையான தீவன சாகுபடியின் மூலம் தீவன வங்கிகள் நிறுவுதல்.
- தீவன உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் தீவனத்தை பதப்படுத்தி பாதுகாக்கும் முறையின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையுடன் இணைந்து மாற்று தீவனமான அசோலா உற்பத்தியை விவசாயிகளின் நிலங்களில் மேற்கொள்ளுதல்.
- வனத்துறையுடன் இணைந்து கிராமப்புற பொது நிலங்களில் மரவகை தீவன சாகுபடியினை மேற்கொள்ளுதல்.
- கிராமப்புற இளைஞர்களை தீவன உற்பத்தியில் ஈடுபடுத்தி தொழில் முனைவோராக உருவாக்குதல்.
- தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையுடன் இணைந்து தீவன சாகுபடியில் நீர் மேலாண்மைக்கான (நீர் தெளிப்பான்/ மழை தூவுவான்) திட்டங்களை செயல்படுத்துதல்.
- தீவன சாகுபடியில் இயந்திரமயமாக்குதலை ஊக்குவித்திட புல்வெட்டும் கருவிகள் விநியோகித்தல்.
- கால்நடைகளுக்கு வழங்கும் தீவனங்கள் விரயமாவதை குறைத்திட புல்நறுக்கும் கருவிகள் விநியோகித்தல்.

## கால்நடை நலம்

கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் "சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்கள்" நடத்துவதன் மூலம் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு

- ✓ சிகிச்சையளித்தல்,
- ✓ குடற்புழு நீக்கம் செய்தல்,
- ✓ நோய்களுக்கு எதிரான தடுப்பூசி அளித்தல்,
- ✓ ஆண்மை நீக்கம்,
- ✓ செயற்கை முறை கருவூட்டல்,
- ✓ மலடு நீக்க சிகிச்சைகள்,
- ✓ சினை சரிபார்ப்பு,
- ✓ மூட்டு அறுவை சிகிச்சை போன்ற சிறு அறுவை சிகிச்சைகள் செய்யலாம்.

## இம்முகாம்களின் மூலமாக மேற்கொள்ளகூடிய விரிவாக்க நடவடிக்கைகள்

- ✓ கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள வல்லுநர்கள் இத்தகைய முகாம்களை நடத்தும் போது கிராமப்புற விவசாயிகளுக்கு சிறப்பு ஆலோசனை விரிவுரைகளை வழங்குதல்.
- ✓ ஒவ்வொரு தலைமுறைக்கு பிறகும், கால்நடைகளின் உற்பத்திக்கான மரபணுவினை மேம்படுத்துவது, முற்காப்பு தடுப்பூசிகள், சீரான உணவு, தாது உப்பு கலவை, பெண் கன்றுகளுக்கு கன்று வீச்சு நோய் தடுப்பூசி, ஆண்டு முழுவதும் பசுந்தீவனம் உற்பத்தி, ஒவ்வொரு துளி நீரையும் பாதுகாத்தல், தூய்மை, விலங்கிலிருந்து மனிதனுக்கு பரவும் நோய்களிலிருந்து பாதுகாப்பு மற்றும் பல்வேறு பொருட்கள் குறித்த துறையின் விரிவாக்க முயற்சியின் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கு எடுத்துரைத்தல்.
- ✓ மேலும் விவசாயிகளுக்கு வழிகாட்டும் வகையில் கால்நடை வளர்ப்பிலிருந்து சிறந்த வருவாயைப் பெற பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை நடைமுறைகள் தொடர்பான துண்டு பிரசுரங்கள் விநியோகித்தல்
- ✓ அமர்வின் போது, சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளைப் பின்பற்றும் விவசாயிகள், தங்கள் கண்டுபிடிப்புகளை கூட்டத்தில் பகிர்ந்து கொள்ளுதல்

## தடுப்பூசி பணிகள்

தேர்ந்தெடுக்கப்படும் கிராமங்களில் கீழ்க்கண்ட தடுப்பு மருந்துகள் கால்நடை மற்றும் கோழியினங்களில் மேற்கொள்வதன் மூலம் அவற்றின் நலம்

காக்கலாம். தடுப்பு மருந்துகளின் பயன்கள் மற்றும் அதன் அவசியம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு உண்டாக்கலாம்.

கோழியினம் - கோழிக்கழிச்சல் தடுப்பூசி (Ranikhet Disease Vaccine 'K')
ஆட்டினம் - ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி (PPRV)
மாட்டினம் - கோமாரி நோய் தடுப்பூசி (FMDV)

இது தவிர, தேர்ந்தெடுக்கப்படும் கிராமங்களில் நோய் கிளர்ச்சி ஏற்பட்டால் அல்லது நோய் கிளர்ச்சி பாதிப்படைந்த கிராமமாக இருந்தால் (Endemic Villages) அடைப்பான், தொண்டை அடைப்பான். சப்பை நோய், ஆட்டம்மை நோய் ஆகிய பிறநோய்களுக்கு தடுப்பு நடவடிக்கையாக அந்தந்த நோய்க்கான தடுப்பூசி செலுத்தி கால்நடைகளின் நலம் பேணலாம்.

**<u>விவசாயிகளுக்கான பயிற்சிகள்</u>**

- புறக்கடை கோழிவளர்ப்பில் நாட்டுகோழி வளர்ப்பு
- கறவை மாடுகள் நலன் காத்து பால் உற்பத்தியை அதிகரிக்க செய்தல்
- வெள்ளாடு / செம்மறியாடு வளர்த்தல்
- சுத்தமான பால் உற்பத்தி செய்யும் முறைகள்
- பண்ணை பொருளாதாரம்
- கால்நடைகளுக்கு மரபு சார் மூலிகை மருத்துவம்
- குறைந்த விலையில் வழக்கத்தில் இல்லா தீவனம் அளித்தல்
- ஒருங்கிணைந்த கால்நடைப் பண்ணை
- கால்நடைகளை தாக்கும் நோய்கள்
- கால்நடைகளுக்கு அளிக்கப்படும் தீவன முறைகள்
- கால்நடைகளுக்கான கோடைக்கால மேலாண்மை
- உள்ளூரிலே கிடைக்கும் தீவன மூலப்பொருட்களைக் கொண்டு குறைந்த செலவில் தீவனம் தயாரித்தல்
- அசோலா உற்பத்தி முறை பயிற்சி அளித்தல்
- நாட்டு கால்நடை இனங்களை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல்

**<u>2. பால்வளம்</u>**

1. தமிழ்நாட்டில் தற்போது கிராம அளவில் 9600 தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் மூன்றடுக்கு பால் கூட்டுறவு அமைப்புகளின் அடித்தளமாக செயல்படுகின்றன. இந்த கூட்டுறவு அமைப்புகள் பால் உற்பத்தியாளர்களுடன் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளன. உறுப்பினர் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து தரமான பாலை கொள்முதல் செய்து உள்ளூர் தேவைக்காக ஒரு பகுதியை விற்பனை செய்த பிறகு எஞ்சிய உபரிப் பால் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களுக்கு வழங்கப்படும்.

(த.பி.பா.)

2. சங்கம் இல்லாத கிராம பஞ்சாயத்துகளில் புதிய சங்கம் பதிவு செய்ய உத்தேசிக்கப்பட்ட கிராமத்தில் சங்க உறுப்பினராக சேர்க்க, அதே கிராமத்தில் வசிக்கும் குறைந்தபட்சம் 25 தகுதிவாய்ந்த குடிமக்கள், பால் கூட்டுறவு சங்கத்தை பதிவு செய்ய கோரி சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் துணைப்பதிவாளர் (பால்வளம்) அவர்களுக்கு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
3. முதுநிலை ஆய்வாளர்கள் (பால்) அல்லது மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் விரிவாக்க அதிகாரிகள் கள ஆய்வை மேற்கொண்டு, கறவைகளின் எண்ணிக்கை, அப்பகுதியில் உள்ள பால் உற்பத்தித் திறன், பால் வழித்தடம் கிடைக்கும் தன்மை, இலாபத்தில் செயல்படுவதற்கான வாய்ப்புகள், பாலின் தரம் ஆகியன குறித்து ஆய்வு மேற்கொள்வார்கள்.
4. முன்மொழியப்பட்ட சங்கத்தின் விவகார எல்லையினை மற்றொரு பதிவு செய்யப்பட்ட பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் செயல்பாட்டு எல்லையுடன் ஒன்றுடன் ஒன்று சேர்க்கக் கூடாது. இருப்பினும், மகளிர் அல்லது ஆதி திராவிடர் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கங்கள் அதே பகுதியில் செயல்படும் போது, பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவு சங்கத்தின் செயல்பாடுகளை பாதிக்காமல் முடிந்தவரை ஒரே பகுதியில் பதிவு செய்யப்படுகின்றன.
5. சங்கம் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முதன்மை அமைப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார். மேலும், உறுப்பினர்கள் அப்பகுதியை சார்ந்தவர்கள் என்பதற்கான குடியிருப்புக்கான ஆதாரம், உள்ளூர் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் நிலுவையின்மைச் சான்று உள்ளிட்ட முழு வடிவத்தில் முன்மொழிவுடன் சமர்ப்பிக்க வேண்டும். முன்மொழிவு பெறப்பட்ட நாளிலிருந்து 120 நாட்களுக்குள் துணைப்பதிவாளர் (பால்வளம்) சங்கத்தை பதிவு செய்வார்.
6. தமிழகத்தில் உள்ள செயலிழந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களை புதுப்பித்து அச்சங்கங்களின் வாயிலாக பால் கொள்முதல் செய்யப்பட்டு உற்பத்தியாளர்களின் பாலுக்குண்டான நியாயமான விலை கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
7. மேற்கூறிய தொடக்க பால் கூட்டுறவு சங்கம் பதிவு செய்தவுடன், அச்சங்கத்தில் கொள்முதல் செய்யப்படும் தரமான பால், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றித்தின் கீழ் செயல்படும் பால் குளிர்விப்பு நிலையம், தொகுப்பு பால் குளிர்விப்பு மையம் அல்லது பால் பண்ணைக்கு அனுப்பி வைக்கப்படும்.
8. மேற்கூறிய கிராமப் பஞ்சாயத்துகளில் உற்பத்தியாகும் பாலை உடனடியாக மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றித்தின் மூலம் கொள்முதல் செய்ய அக்கிராமத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்களை

இணை உறுப்பினர்களாக சேர்த்து அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பாலை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும்.

9. மேற்கூறிய தொடக்க பால் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வாரம் ஒரு முறை அல்லது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை நியாயமான பால் பணம் அச்சங்கங்களின் மூலம் பட்டுவாடா செய்யப்படும்.
10. சங்க உறுப்பினர்களின் கறவைகளுக்கு தேவையான இடுபொருட்களான, கலப்புத் தீவனம், தாது உப்பு கலவை ஆகியவை வெளிச்சந்தையைக் காட்டிலும் மலிவான விலையில் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.
11. உறுப்பினர்களின் கறவைகள் மற்றும் கன்றுகளுக்கு தேவைப்படும் கால்நடை மருத்துவச் சிகிச்சை மற்றும் செயற்கை முறை கருவூட்டல் வசதிகள் அந்தந்த கிராமத்தில் அவரவர் இல்லத்திற்கே சென்று வழங்கப்படும்.
12. சங்க உறுப்பினர்களின் கறவைகளுக்கு 50% மானியத்தில் கால்நடை காப்பீடு வசதி தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் வழங்கப்படும்.
13. உறுப்பினர்களின் கறவை பசுக்களுக்கு தேவைப்படும் தடுப்பூசிகள் கால்நடை பராமரிப்புத் துறையின் ஒத்துழைப்புடன் அவரவர் இல்லத்திற்கே சென்று வழங்கப்படும்.

3. <u>மீன்வளம் மற்றும் மீனவர்நலத்துறை</u>

"கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தில்" தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில், தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் (TNIAMP) மூலம், மீன்வளர்ப்பு மேற்கொள்வதற்கு பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட வேண்டும்.

## V. நீர்வளத்துறை

### 1) பி சேனல் தூர்வாருதல், கரைகளை பலப்படுத்துதல், ஏரிகளுக்கு நீர்வரும் வரத்து வாய்க்கால்களை தூர் வாருதல், ஏரிகளுக்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்குதல்

கால்வாய்கள், வாய்க்கால்கள், கிளைகால்வாய்கள், வடிகால்கள், வழங்கு கால்வாய்கள் ஆகிய நீர்நிலைகளை தூர்வாரி செப்பனிடும் பணிகள் மாநில நிதி திட்டம், பிரதான் மந்திரி கிரிஷி சின்சாயி யோஜனா (PMKSY) திட்டத்தின் கீழ் வேளாண்மைக்கு நேரடியாக தொடர்புடைய நீர் நிலைகளை செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டம், உலக வங்கி நிதி உதவியுடன்

(த.பி.பா.)

தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் (TN IAMP) போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும் பணிகளில் ஒரு அங்கமாக தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

a) காவிரி டெல்டா சிறப்பு தூர்வாரும் திட்டம்

காவிரி டெல்டா பகுதிகளில் நீர்நிலைகளை வடிவமைக்கப்பட்ட படுகை நிலைக்கு தூர்வாருதல், கால்வாய்கள் / வாய்க்கால்கள் / கிளைகால்வாய்கள் / வடிகால்கள் / வழங்கு கால்வாய்களில் படிந்துள்ள மண்திட்டுகள் மற்றும் புதர்களை அகற்றுதல் போன்ற பணிகளை போர்க்கால அடிப்படையில் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு பாசன நீர் கடைமடை வரை தங்குதடையின்றி சென்றடைய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

b) செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR)

ஒன்றிய அரசின் செப்பனிடுதல், புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் (RRR) திட்டத்தின் கீழ் ஏரிகளை தூர்வாருதல் மற்றும் அதன் கரைகளை பலப்படுத்துதல், மதகுகள் மற்றும் உபரி ஏற்பாடுகளை புனரமைத்து மேம்படுத்துதல் மற்றும் ஏரிகளுக்கு நீர் வழங்கும் வரத்து வாய்க்கால்களை தூர்வாரி பலப்படுத்துதல் போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

c) தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டம் (TN IAMP)

உலக வங்கி நிதிஉதவியுடன் செயல்பட்டுவரும் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனப்படுத்தும் திட்டத்தின் (TN IAMP) கீழ் நீர்வளத்துறை மூலம் ஏரி அமைப்புகளில் உள்ள ஏரிகள் மற்றும் பிரதான பாசனவாய்க்கால்களில் புனரமைப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

2) விவசாய வயல்களுக்காக வண்டல்மண் எடுக்க அனுமதி வழங்குதல். வண்டல் மண் இலவசமாக வழங்குதல்

தமிழ்நாட்டில் உள்ள நீர்நிலைகளின் கொள்ளளவு காலப்போக்கில் வண்டல் படிவுகளால் கணிசமான அளவில் குறைந்துள்ளது. நீர்நிலைகளில் படிந்துள்ள வண்டல் படிவுகளில், ஊட்டச்சத்து அதிகளவில் நிறைந்துள்ளதால் இயற்கை உரமாகவும் பயன்படுத்த இயலும். நீர்நிலைகளில் படிந்துள்ள வண்டலை தேவைக்கேற்ப இலவசமாக எடுத்துச் செல்ல வேளாண் பெருமக்களை அனுமதிப்பதன் வாயிலாக நீர்நிலைகளில் இழந்த கொள்ளளவை

மீளப்பெற இயலும். ஏரிகளின் மீளப் பெறப்பட்ட கொள்ளளவு மற்றும் தூர்வாரப்பட்ட படிவுகள், இவையிரண்டுமே விவசாயிகளுக்கு பயனளிக்கும்.

இதனடிப்படையில் 1959- ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிமங்கள் சலுகை விதிகளில், விதி 12(2) மற்றும் 12 (2A) (a) -க்கு, 27.04.2017-இல் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண். 50, தொழில் (எம். எம்.சி.1) துறை, நாள். 27.04.2017-இல் அரசு ஆணையிட்டுள்ளது. மாநிலத்திலுள்ள (சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் நீங்கலாக) ஏரிகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் அருகில் அமைந்துள்ள கிராமங்கள் மற்றும் அவற்றின் சுற்று வட்டார கிராமங்களின் மட்பாண்டத் தொழிலாளர்கள், பொதுமக்களின் வீட்டு உபயோகம் மற்றும் வேளாண் தேவைகளுக்காக வேளாண் பெருமக்களுக்கு ஏரியின் படுகைகள், வாய்க்கால்கள் மற்றும் நீர்த்தேக்கங்களிலிருந்து களிமண், வண்டல்மண், சவுடு மற்றும் சரளை மண்ணை மாவட்ட அரசிதழில் அறிவிக்கை வெளியிட்ட பிறகு, சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் அனுமதியுடன் இலவசமாக எடுத்துச் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளன.

வேளாண் பயன்பாட்டிற்காக 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை வண்டல் மண் மற்றும் களிமண் வழங்கும் அளவு நன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 75 கன மீட்டருக்கு மிகாமலும் (எக்டேருக்கு 185 கன மீட்டருக்கு மிகாமலும்) புன்செய் நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 90 கன மீட்டருக்கு மிகாமலும் (எக்டேருக்கு 222 கன மீட்டருக்கு மிகாமலும்) இருக்க வேண்டும். வீட்டு உபயோகத்திற்கு மண், சவுடு மற்றும் சரளை மண் எடுக்கும் அளவு 30 கன மீட்டருக்கு மிகாமலும், மட்பாண்டங்கள் செய்வதற்கு எடுக்கப்படும் களிமண் 60 கன மீட்டருக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

## VI. எரிசக்தித்துறை

### தேர்வு செய்யப்பட்ட தொகுப்பு நிலங்கள் /ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளின் நிலங்களில் ஏற்படுத்தப்படும் ஆழ்துளை/ குழாய்/ திறந்தவெளி கிணறுகளுக்கு போர்க்கால அடிப்படையில் மின் இணைப்பு வழங்குதல்.

i) தரிசு நிலத் தொகுப்புகள் மற்றும் அத்தரிசு நிலத் தொகுப்புகளுக்கு அருகிலுள்ள புறம்போக்கு நிலங்களில் ஏற்படுத்தப்படும் ஆழ்துளை /

குழாய் / திறந்தவெளி கிணறுகளுக்கு தட்கல் (TATKAL- Self Financing Scheme) திட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு அதிகபட்சமாக 2,000 மின் இணைப்புகள் வரை 100% மானியத்தில் வழங்கப்படும்.

ii) மேற்கண்ட தரிசு நிலத் தொகுப்புகளுக்கு வழங்கப்படும் மின் இணைப்பினை, வேளாண்மைத் துறையால் கண்டறியப்படும் தரிசுநிலத் தொகுப்புகளுக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பதவியின் பெயரிலும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையால் கண்டறியப்படும் தொகுப்புகளுக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் பதவியின் பெயரிலும் விண்ணப்பித்து மின் இணைப்பு பெறப்படவேண்டும்.

iii) மேற்கண்டவாறு வழங்கப்படும் மின் இணைப்புகளுக்கு மின் அளவீட்டுக் கருவி (Metre) பொறுத்தப்படவேண்டும்.

iv) தரிசுநிலத் தொகுப்பிற்கு வழங்கப்படும் விவசாய மின் இணைப்புகளுக்கான மின் நுகர்வுக் கட்டணமானது மாண்புமிகு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள மின் கட்டண விகிதத்தின்படி (Tariff Order) கணக்கிடப்பட வேண்டும்.

v) கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளின் நிலங்களில் ஏற்படுத்தப்படும் ஆழ்துளை / குழாய் / திறந்தவெளி கிணறுகளுக்கும் தட்கல் (TATKAL- Self Financing Scheme) திட்டத்தின் கீழ் மின் இணைப்புகள் 100% மானியத்தில் வழங்கப்படும்.

## VII. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

### 1. பட்டுவளர்ச்சித்துறை

#### a. விவசாயிகளுக்கு பட்டு வளர்ப்பு பயிற்சி அளித்தல்

பட்டுத்தொழில் மேற்கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகளுக்கும், பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும், பட்டுத்தொழில் குறித்த தொழில்நுட்ப பயிற்சிகள், தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூரில் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசின் "சில்க் சமக்ரா" என்ற மத்திய பகுதித் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு பட்டுத்தொழில் சார்ந்த தொழில் நுட்ப பயிற்சி வழங்குவதற்கான நிதி பெறப்பட்டு, தங்கும் வசதியுடன் கூடிய பயிற்சி வழங்கிடவும், வேளாண்மை - உழவர் நலத் துறையின் கீழ் வட்டார அளவில்

செயல்பட்டுவரும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையுடன் (ATMA) ஒருங்கிணைந்து கிராமங்கள் வாரியாக விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆத்மா திட்டம் மூலம் பயிற்சிக்கென நிதி உதவி பெற்று பட்டு வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் விவசாயிகள் பயிற்சி மையங்களின் மூலம் மாவட்ட நிர்வாகம், வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத் துறையுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு, பட்டு வளர்ப்புப் பயிற்சி வழங்கிட வேண்டும். மேலும், புதிய தொழில்நுட்பங்களை அறிந்து பயன்பெற மத்திய பட்டுவாரிய நிதி உதவியுடன், தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர் மூலமும் தேவையான பயிற்சிகள் பயனாளிகள் பெற தேவையான நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது.

b. பட்டுப்புழு வளர்க்க திட்ட உதவிகள் வழங்குதல்

மல்பெரி நடவு செய்து, பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ளும் பட்டு விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் பல்வேறு திட்ட இனங்களுக்கு மானிய உதவிகள் வழங்கப்படவுள்ளது. இத்திட்டங்கள் "கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்" கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளில் உள்ள விவசாயிகளில் பட்டுத்தொழிலில் ஈடுபட ஆர்வமுள்ள பயனாளிகளைத் தேர்வு செய்து அவர்கள் பயன்பெறும் வகையில் திட்ட பயன்கள் பெறுவதில் முன்னுரிமை அளித்து திட்டம் செயல்படுத்த வேண்டும்.

<u>திட்ட இனங்களின் விவரம்:-</u>

அ. உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்.

ஆ. பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்ள தனி பட்டுப்புழுவளர்ப்பு மனை அமைக்கும் பட்டு விவசாயிகளுக்கு, பட்டுப்புழுவளர்ப்பு மனைக்கான உதவித்தொகை வழங்குதல்.

இ. பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழங்குதல்.

ஈ. முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்குதல்.

உ. தரமான பட்டுக்கூடு உற்பத்திக்கான இடுபொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் வழங்குதல்.

c) இலாபகரமான விலையில் சந்தைப்படுத்த தேவையான உதவிகளை வழங்குதல்

பட்டு விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருளான பட்டுக்கூடுகளை இலாபகரமான விலையில் சந்தைப்படுத்த தேவையான அனைத்து உதவிகளும் பட்டு வளர்ச்சித் துறையால் வழங்கப்பட வேண்டும். அதிக பட்டு நூற்பாளர்களை உருவாக்கி, பட்டுக்கூடுகளின் தேவையை அதிகரிப்பதன் மூலம், விவசாயிகளது பட்டுக்கூடுகளுக்கு இலாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். ஆதலால், மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசுகளின் நிதி உதவியுடன் தனியார் தொழில் முனைவோர்களைக் கொண்டு மேம்படுத்தப்பட்ட பட்டுநூற்பு அலகுகள் நிறுவப்பட வேண்டும். அரசு பட்டுக்கூடு அங்காடிகளில் மின்னணு ஏலமுறையை அறிமுகப்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன்மூலம் பட்டுக்கூடுகளுக்கு இலாபகரமான விலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

பட்டு வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பட்டு விவசாயிகளுக்கான நலத்திட்டங்கள், தேர்வு செய்யப்பட்டுள்ள கிராம ஊராட்சிகளில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில், முன்னுரிமை அளித்து, பயனாளிகள் தேர்வு செய்து கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து, திட்டம் செயல்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ள கிராமங்களில் திட்டம் விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இத்திட்டம் செயல்படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளின் விவரங்களை வேளாண்மைத் துறை மற்றும் தேட்டக்கலைத் துறையிடம் பெற்று ஒருங்கிணைந்து திட்டம் செயல்படுத்த வேண்டும்.

இத்திட்டத்தின்கீழ் மாவட்ட அளவில் நடைபெறும் கூட்டங்களில் சம்மந்தப்பட்ட உதவி இயக்குநர்களும் வட்டார அளவில் நடைபெறும் கூட்டங்களில் சம்மந்தப்பட்ட பகுதி சரக அலுவலர்களும் கலந்துகொண்டு வேளாண் துறையுடன் இணைந்து இத்திட்டத்திற்கென தேர்வு செய்து தெரிவிக்கப்பட்டுள்ள கிராமங்களில் பட்டு வளர்ச்சித் திட்டங்களை மாவட்ட

நிர்வாகம் வழங்கிய அறிவுரையின்படி தேர்வு செய்யப்பட்டுள்ள பகுதியில் திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டும்.

மேலும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்களின் திட்ட முன்னேற்ற அறிக்கையினை இணைப்பில் காணும் படிவத்தின்படி தனியே பராமரிக்கவும், அதனை பிரதி மாதம் 10-ஆம் தேதிக்குள் இயக்ககத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.

## பட்டுவளர்ச்சித் துறை
## கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்ட பயனாளிகள் விவரம்

| வ. எ ண் | மாவட்டம் | வட்டம் | கிராமம் | தொகுப்பின் எண்.(ம) பெயர் | விவசாயி பெயர் & முகவரி | விவசாயி விபரம் | வகுப்பு | ஆதார் எண். | தொலை பேசி எண் | மொத்த பரப்பு (ஏக்கரில்) | மல்பெரி சாகுபடி பரப்பு | திட்ட உட்கூறு | திட்ட பலன் தொகை (இலட்சத்தில்) | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | (சிறு/ குறு/ பெரு) | (ஆதி/ பவ./ இதர) | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | |

உதவி இயக்குநர்
பட்டுவளர்ச்சித்துறை

(த.பி.பா.)

2. தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம்

**a. இலாபகரமான விலையில் சந்தைப்படுத்த தேவையான உதவிகளை வழங்குதல்**

தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலுள்ள பனை தொழிலாளர்களை ஒருங்கிணைத்து பனை சார்ந்த கைவினைப் பொருட்களை தயாரிக்க பயிற்சி அளிப்பதும், பனைத் தொழிலாளர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பனைப் பொருட்கள் மற்றும் பனை ஓலை பொருட்களை விற்பனை செய்திட ஏதுவாக சந்தைப்படுத்த தேவையான உதவிகளையும் வழங்கிட வேண்டும்.

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கீழ் உள்ள 720 ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் மூலம் நடத்தப்படும் பனை பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியில் பங்கேற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று துவக்கிவைக்கப்பட்ட நியாய விலைக் கடைகளின் மூலம் பனை வெல்லம் விற்கப்படும் திட்டத்தின் கீழ், மாவட்டங்களில் உள்ள மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலை இணை பதிவாளர்களிடம் இருந்து பெறப்படும் தேவைப்பட்டியலுக்கேற்ப தேவையான பனை வெல்லத்தை, தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் கீழ் உள்ள ஆரம்ப பனை வெல்லம் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களிடம் இருந்து கொள்முதல் செய்து, மொத்த விற்பனை கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

**b. பனை மேம்பாடு மற்றும் பனை சார்ந்த கைவினைப் பொருட்கள் பயிற்சி அளித்தல் மற்றும் சந்தைப்படுத்த தேவையான உதவிகள் வழங்குதல்.**

பனைத் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பனைப் பொருட்கள் மற்றும் பனைஓலை கைவினைப் பொருட்களை தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் கொள்முதல் செய்து, தமிழ்நாடு கதர்கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் அனைத்து கதர் அங்காடிகள் மற்றும் மாநில இணையம் மற்றும் மாவட்ட சம்மேளனங்களின் பனை பொருள் விற்பனை அங்காடிகளின் மூலம் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இப்பொருள் தொடர்பாக அனைத்து மாவட்டத்திலுள்ள துணைப்பதிவாளர்/ உதவி இயக்குநர்கள் (கதர் கிராமத் தொழில்கள்) மாவட்ட ஆட்சியர்களை அணுகி இத்திட்டத்தில் பனைத் தொழிலாளர்கள் பயனடைந்திட நடவடிக்கை

மேற்கொண்டு அப்பணியின் முன்னேற்ற அறிக்கையினை வாரியத்திற்கு சமர்பிக்க வேண்டும்.

இப்பணிகளில் அனைத்து மாவட்ட உதவி இயக்குநர்கள் / துணைப் பதிவாளர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டும். மேலும், அனைத்து மண்டல துணை இயக்குநர்கள் இப்பணிகளை கண்காணித்து மேற்பார்வை செய்து, தங்களது கட்டுப்பாட்டிலுள்ள உதவி இயக்குநர்களிடமிருந்து பணியின் முன்னேற்ற அறிக்கையினை பெற்று அவற்றை தொகுத்து வாரியத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர் 16/3/23
16/3/23